{සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழு பதிப்புரிமை உடையது / All Rights Reserved / සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழு பதிப்புரிமை உடையது }

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித்திணைக்களம்- வடமத்திய மாகாணம்
Department of Education – North Central Province

தரம் - 11 | மூன்றாம் தவணை பரீட்சை - 2025 | நேரம் : 2 மணி 10 நிமிடம்

பாடம் : இஸ்லாம் | வினாத்தாள்: | சுட்டெண் -

# புள்ளித் திட்டம்

## இஸ்லாம் I

**(01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01** | 2 | **11** | 1 | **21** | 2 | **31** | 1 |
| **02** | 4 | **12** | 2 | **22** | 4 | **32** | 3 |
| **03** | 1 | **13** | 4 | **23** | 3 | **33** | 2 |
| **04** | 2 | **14** | 1 | **24** | 4 | **34** | 2 |
| **05** | 1 | **15** | 2 | **25** | 4 | **35** | 4 |
| **06** | 2 | **16** | 4 | **26** | 3 | **36** | 4 |
| **07** | 4 | **17** | 1 | **27** | 3 | **37** | 3 |
| **08** | 3 | **18** | 1 | **28** | 3 | **38** | 2 |
| **09** | 2 | **19** | 3 | **29** | 2 | **39** | 4 |
| **10** | 3 | **20** | 1 | **30** | 1 | **40** | 3 |

## இஸ்லாம் II

**(01)**

1) உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துதல் - தஸ்கியதுன் நப்ஸ்
முதன்மைப்படுத்தப்பட வேண்டியவை பற்றிய சட்டநோக்கு - பிக்ஹுல் அவ்லவிய்யாத்

2) கழா - படைத்தல், தீர்ப்பளித்தல், நிறைவேற்றல்
கத்ர் - நிர்ணயித்தல், முன்னேற்பாடு, மட்டிடுதல் *(ஏதேனும் ஒவ்வொன்று)*

3) ஸலாத்துல் இஸ்திஸ்கா - மழை வேண்டித் தொழுதல்
ஸலாத்துல் கவ்ப் - அச்சமான சூழ்நிலையில் தொழுதல் / யுத்த களத்தில் தொழுதல்

4) வுழு, கடமையான குளிப்பு

5) மின்பர், ம:.தனா, குத்பாக்கள், ஸுப்பா எனப்படும் திண்ணை, அஞ்சல் முறையான தக்பீர், ஹல்கா *(போன்ற ஏதேனும் இரண்டு)*

6) *மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் அக்ஸா*

7) அரபாவில் தரித்தல், மினாவில் தரித்தல், முஸ்தலிபாவில் தரித்தல், ஜம்ராக்களில் கல் எறிதல், அறுத்துப் பலியிடல் *(ஏதேனும் இரண்டு)*

8) தகவல்கள் ஆதாரபூர்வமானவையாக இருத்தல், நம்பகத் தன்மையைக் கொண்டிருத்தல், நடுநிலமை தவறாது செயற்படல், பொது நலன் பேணல், பண்பாடு பேணல் *(போன்ற ஏதேனும் இரண்டு)*

9) ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி, முஹம்மத் அல்பாதிஹ்

10) ஈஜாப் : வலி திருமணத்திற்கான சம்மதத்தை வெளிப்படுத்துதல்
கபூல் : மணமகன் அதனை ஏற்றுக்கொள்ளல்

**(02)**

i. இஸ்லாமிய வரலாற்றில் பிற்பட்ட காலங்களில் முஸ்லிம் சமூகத்திற்குள் உருவான அரசியல் ரீதியான உட்பூசல்கள், அந்நியர்களின் சிந்தனைகள், சமயப் பிரிவுகளுடன் ஏற்பட்ட உறவுகள், தொடர்புகள், பகுத்தறிவை எல்லை கடந்து பிரயோகிக்கும் நிலை, தீவிரப் போக்கு, மனோ இச்சைகளைப் பின்பற்றியமை, எதிரிகளின் சதி, மூடநம்பிக்கைகள் *(ஏதேனும் இரண்டு)*

ii. ரித்தத் - ஒரு முஸ்லிம் தன்னைக் காபிராக்கக்கூடிய வார்த்தையை மொழிவதன் மூலம் அல்லது செயலைச் செய்வதன் மூலம் இஸ்லாத்தை விட்டும் நீங்கிவிடுதல் ரித்தத் எனப்படும்.

விளைவுகள் : முர்தத்துடன் முஸ்லிம் சமூகம் தமது தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளும். அவரது மனைவி அவரை விட்டும் பிரிந்து விடுவார். அவரது சொத்துக்கள் அவரது கடன்களை அடைக்கவும் குடும்பத்தைப் பராமரிக்கவும் பயன்படுத்தப்படும். அவரது சொத்து வாரிசுகளுக்கு வழங்கப்படமாட்டாது. அவர் உறவினர்களிடம் இருந்து வாரிசுச் சொத்தைப் பெறவும் அருகதை அற்றவர். தவ்பா செய்யாத நிலையில் இவர் மரணித்தால் இவருக்காக தொழுகை நடத்தப்பட மாட்டாது. முஸ்லிம் மையவாடியில் இவர் அடக்கம் செய்யப்படவும் மாட்டார். முஸ்லிம் சமூகம் இவரை ஒரு சமயத் துரோகி போன்றே கருதும். *(ஏதேனும் இரண்டு)*

iii. அன்றாட செயலொன்று வணக்கமாக வேண்டுமாயின் கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகளான தூய எண்ணம், அடிப்படை வணக்க வழிபாடுகளுக்குத் தடையில்லாதிருத்தல், ஷரீஆவின் அனுமதி, ஷரீஅத்தின் வரையறைகளை மீறாதிருத்தல், நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செய்தல் ஆகிய நிபந்தனைகளுடன் விளையாட்டை தொடர்புபடுத்தி விளக்கியிருத்தல் வேண்டும்.

(2+3+5 புள்ளிகள்)

**(03)**

i. இப்ராத், தமத்துஉ, கிரான் *(ஏதேனும் இரண்டு)*

ii. ஸக்காத்தைக் கூட்டாக நிறைவேற்றுவதால் பயன்கள் : ஸக்காத் கடமையிலிருந்து செல்வந்தர்கள் யாரும் நழுவி விடாதிருக்க இது வழிசெய்கிறது. ஏழைகளின் சுயமரியாதை பாதுகாக்கப்படுகிறது. வறுமை ஒழிப்புக்காகப் பாரிய வேலைத்திட்டங்களை முறையாகத் திட்டமிட்டு மேற்கொள்ளலாம். கவனிக்கப்பட வேண்டிய அனைவரையுமே கவனித்துக் கொள்ளலாம். சமூக நலனைப் பாதுகாக்கும் பணிகளிலும் கவனம் செலுத்த முடிகிறது. *(இவற்றுள் மூன்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. கட்டாயக் கடமை, ஈமானின் அடையாளம், பெறுமதிமிக்க கடமை, வெற்றிக்கான வழி, மறுமையில் முதலில் விசாரிக்கப்படுவது *(போன்ற பொருத்தமான ஐந்து விடயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்)*

(2+3+5 புள்ளிகள்)

**(04)**

i. இஜ்மாஉ என்பது "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மரணத்தின் பின்னர் தோன்றுகின்ற ஏதேனுமொரு பிரச்சினைக்கான தீர்வு அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ காணப்படாதவிடத்து குறித்த அக்காலத்தில் வாழும் முஜ்தஹிதுகள் அப்பிரச்சினைக்கான தீர்வில் ஒருமித்த கருத்து கொள்வதையே" குறிக்கும்.

ii. முஸ்லிமாக இருத்தல். அல்குர்ஆன், ஸுன்னாவில் ஆழமான அறிவுடையவராக இருத்தல். கலைகளில் நிபுணத்துவம் பெற்றிருத்தல். அரபு மொழியில் பாண்டித்தியம் பெற்றிருத்தல். முன்னைய முஜ்தஹித்களின் இஜ்திஹாத் பற்றிய விளக்கம் காணப்படல். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிரச்சினைகள் பற்றிய தெளிவு காணப்படல். தக்வாவும் நன்னடத்தையும் உடையவராயிருத்தல். *(இவற்றுள் மூன்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. மொழி மற்றும் இலக்கிய ரீதியிலான அற்புதம், முன்னறிவிப்பு சார்ந்த அற்புதம், சட்டம் தொடர்பிலான அற்புதம், அறிவியல் விஞ்ஞான அற்புதம் போன்ற பகுதிகளிலிருந்து ஏதேனும் ஐந்து உதாரணங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டருத்தல் வேண்டும். *(உதாரணம் : சிசு உருவாக்கம் பற்றிய அல்குர்ஆனின் அறிவியல், தேனின் மருத்துவக் குணம் உள்ளமை, பிர்அவ்னின் உடல் பாதுகாக்கப்படும் என்ற முன்னறிவிப்பு...)*

(2+3+5 புள்ளிகள்)

**(05)**

i. அஜாஇபுல் ஹின்ந் - இப்னு ஷஹ்ரயார், புதூஹுல் புல்தான் - பலாதூரி

ii. முஸ்லிம்களின் கல்வி முன்னேற்த்திற்காகப் பாடுபட்டமை, முஸ்லிம் சமூகத்தில் சமய மறுமலர்ச்சிக்காக உழைத்தமை, அரசியல் ரீதியிலான உரிமைகளையும் அடையாளத்தையும் தமது சமூகத்திற்கு பெற்றுக்கொடுத்தமை *(இவை போன்ற பொருத்தமான ஏதேனும் மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. அல்குர்ஆனைப் பாதுகாத்தமை, கடற்படையை உருவாக்கியமை, ஆட்சியை விஸ்தரித்தமை, பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தமை, அரசியல் நிர்வாக ரீதியான மாற்றங்களை மேற்கொண்டமை. *(போன்ற பொருத்தமான ஐந்து விடயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்)*

(2+3+5 புள்ளிகள்)

**(06)**

i. தலாக் ரஜஈ - மீளத்தக்கது, தலாக் பாஇன் - மீள முடியாதது.

ii. ஸாலிஹான சந்ததியை உருவாக்குதல், உடல், உள அமைதியை ஏற்படுத்துதல், சிறந்த சமூகக் கட்டமைப்பைத் தோற்றுவித்தல்

iii. வளங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன. அவற்றை அவன் மனிதர்களுக்காகப் படைத்துள்ளான். செல்வம் தொடர்பில் மனிதன் மறுமையில் விசாரிக்கப்படுவான். தனிநபர்களின் சொத்தில் சமூகத்துக்கும் பங்குண்டு. செல்வத்தைத் திரட்டுவதற்காக மனிதர்கள் மேற்கொள்ளும் முயற்சி பலனளிப்பதும் பலனளிக்காதிருப்பதும் அல்லாஹ்வின் நாட்டத்தைப் பொறுத்ததே. செல்வம் மனிதனைச் சோதிப்பதற்காகத் தரப்பட்டதாகும். (ஆகியவற்றை சுருக்கமாக விளக்கியிருத்தல் வேண்டும்)

(2+3+5 புள்ளிகள்)

**(07)** *பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்*

i. *தரம் 10 - பாடநூல் பக்கம் 102-106ஐ பார்க்கவும்.*
ii. *தரம் 11 - பாடநூல் பக்கம் 72,73ஐ பார்க்கவும்.*
iii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 93-96ஐ பார்க்கவும்.*
iv. *தரம் 11 - பாடநூல் பக்கம் 150-155ஐ பார்க்கவும்.*

(5x2=10 புள்ளிகள்)